**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Sessions Case No. 67/2025**

Prosecution Witness : **PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** : **செழியன்** | | **Father's Name** | : |
| **Village** : | | **Taluku** | : |
| **Caste** : | | **Calling** | : |
| **Religion** : | | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 07th day of March 2026.

**(1ம் எதிரி விக்னேஷ், 2ம் எதிரி பிரதீப் ஆகியோர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.) (1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரியார் நகர், ஆண்டாங்கோவிலில் குடியிருந்து வருகிறேன். தற்போது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தாத்தையங்கார்பேட்டையில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். 28.10.2023 ஆம் தேதியன்று பஞ்சமாதேவி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் துணை மேலாளராக பணியிலிருந்தேன். அன்று சனிக்கிழமை என்பதால் வங்கி விடுமுறை நான் வீட்டிலிருந்தேன். 28.10.2023 ஆம் தேதியன்று மாலை 5.45 மணியளவில் எங்கள் வங்கியில் பணிபுரியும் நகை மதிப்பீட்டாளர் பிரபாகரன் என்பவர் போன் செய்து பஞ்சமாதேவி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஏடிஎம் இயந்திரத்தின் பேனலை யாரோ அடித்து உடைத்துவிட்டார்கள் என்று போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார். நான் பஞ்சமாதேவி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஏடிம்

இயந்திரத்தை சென்றுபார்த்தேன். அங்கு அவர் கூறியவாறு ஏடிஎம் இயந்திரத்தின் பேனல் உடைந்து கண்ணாடித்துகள்கள் சிதறி இருந்தது. நான் வெங்கமேடு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். **நான் கொடுத்த புகார் இது தான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் வெங்கமேடு காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து என்னிடம் நகல் கொடுத்தார்கள். **அந்த முதல தகவல் அறிக்கையில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். அவை அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வங்கியில் ஏடிஎம் இயந்திரத்தின் உடைந்த பாகங்களை என் முன்பாக காவல்துறையினர் கைப்பற்றினார்கள். **வங்கியின் ஏடிஎம் இயந்திரத்தின் உடைந்த பாகங்கள் இவைதான். அவை அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல்துறையினர் ஏடிஎம் மிஷினின் சேதமதிப்பீடு என்னிடம் கேட்டார்கள். நான் எங்கள் ஈரோட்டில் உள்ள ரிஜியனல் அலுவலகத்தில் உடைந்தபோன மிஷினின் சேதமதிப்பீடு செய்ய வேண்டும் என்று தகவல் கொடுத்தேன். அதன் பேரில் ஈரோட்டிலிருந்து இன்ஜினியர் அனுப்பி சேதமதிப்பீடு செய்தார்கள். மேலும் ஏடிம் மிஷினின் உடைந்த பகுதி சரிசெய்யப்பட்டது. அதற்கான செலவு ரூ.11,800/– செலவானது. அதை ரீஜினல் இந்தியன் ஒவர்சீஸ் வங்கியிலிருந்து என் வங்கிக்கு அனுப்பினார்கள். காவல்துறையினர் சேதத்தின் மதிப்பீட்டிற்காக என்னிடம் இன்வாய்ஸ் கேட்டிருந்தார்கள். அதை நான் காவல்துறையினரிடம் கொடுத்தேன். அந்த இன்வாய்ஸ் இதுதான். அது அ.சா.அ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.1 புகாரை நான் தான் எழுதிக்கொடுத்தேன். காவல்துறையினர் என்ன நடந்தது என்று கேட்டார்கள் நான் நடந்த விவரத்தை எழுதிக்கொடுத்தேன். புகாரை கொடுத்த உடன் முதல் தகவல் அறிக்கை நகல் கொடுத்தார்கள். புகாரை வாங்கிக்கொண்டு காவல்துறையினர் மனு ரசீது கொடுத்தார்கள். 29.10.2023 ஆம் தேதி நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். எந்த தேதியில் மனு ரசீது கொடுத்தார்கள் என்று ஞாபகமில்லை. முதல் தகவல் அறிக்கை நகல் 31 ஆம் தேதி கொடுத்தார்கள். ஏடிஎம் மிஷின் உடைப்பட்டதாக தொலைபேசியில் எனக்கு தகவல் கிடைத்தவுடன் நான் எனது மேலதிகாரிகளுக்கு தொலைபேசியில் தகவல் கொடுத்தேன். 28.10.2023 ஆம் தேதியன்று என் உயர்அதிகாரிகளுக்கும், வங்கியில் உள்ள தனிப்பட்ட செக்யூரிட்டி அதிகாரிகளுக்கும் தகவல் கொடுத்துவிட்டேன். எனது வங்கிக்கு கிளை மேலாளர் தனியாக உள்ளார். வங்கி கிளை மேலாளர் அன்று ஒரிசாவில் இருந்தார். ஆகையால் நான் தான் புகார் கொடுத்தேன். நீங்கள் 28.10.2023 ஆம் தேதி உங்கள் கிளை மேலாளர் ஊரில் இல்லாத விவரத்தையும், மேலதிகாரிக்கும், செக்யூரிட்டி அதிகாரிக்கும் தகவல் கொடுத்த விவரத்தை உங்கள் புகாரில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. ஏடிஎம் மிஷின் அமைந்துள்ள இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் 3 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். 28.10.2023 ஆம் தேதி சம்பவம் நடந்ததை நீங்கள் காலதாமதமாக 29.10.2023 ஆம் தேதி காலை புகார் கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். உங்கள் வங்கியும் ஏடிஎம் மிஷினும் கரூர்–நெருர் பிரதான சாலையில் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். ஏடிஎம் மிஷின் இருந்த இடத்தில் மக்கள் சென்று வருவார்கள் என்றும் வீடுகள் அதிகமாக உள்ள பகுதி என்றும் போக்குவரத்து நிறைந்துள்ள பகுதி என்றும்

சொன்னால் சரிதான். ஏடிஎம் மிஷின் உடைக்கப்பட்டது சம்மந்தமாக பொதுமக்களிடமிருந்து உங்களுக்கு புகார் எதுவும் வரவில்லை என்று சொன்னால் சரிதான். 29.10.2023, 31.10.2023 மற்றும் 12.12.2023 ஆகிய தேதிகளில் காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். காவல்துறையினர் என்னை விசாரித்தபோது முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் கூறியுள்ளீர்களா என்றால் சரிதான். அ.சா.ஆ.5 இன்வாய்ஸ்சை 12.12.2023 ஆம் தேதி காவல்துறையினர் என்னை விசாரித்த போது ஒப்படைத்தேன். அ.சா.ஆ.5 இன்வாய்சில் யார் கொடுத்தார்கள் என்றும் அவர்களுடைய கையெழுத்தும், முத்திரையும் இல்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் வழக்கிற்காக அ.சா.ஆ.5 இன்வாய்ஸ் ஆவணத்தை தயார் செய்து காலதாமத்துடன் கொடுத்துள்ளீர்கள் என்றும் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. ஏடிஎம் மிஷினின் டிஸ்பிளே, பேனல் உடைந்ததாக உங்கள் உயர்அதிகாரிகளுக்கு எழுத்துப்பூர்வமாக ஏதாவது அனுப்பியுள்ளீர்களா என்றால் இல்லை. உங்கள் வங்கியிலும், ஏடிஎம் மிஷினிலும் கண்காணிப்பு கேமரா உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன சம்பவ தினம் அன்று சிசிடிவி கேமராக்கள் பயன்பாட்டில் இருந்தது. வங்கிக்கு முன்பு இருந்த சிசிடிவி கேமராக்களும் பயன்பாட்டில் இருந்தது பழுது ஏதும் இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.07 20:07:59 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Sessions Case No. 67/2025**

Prosecution Witness : **PW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **பிரபாகரன்** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluku** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 07th day of March 2026.

**(1ம் எதிரி விக்னேஷ், 2ம் எதிரி பிரதீப் ஆகியோர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.) (1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது மின்னாம்பள்ளியில் குடியிருந்து வருகிறேன். நான் புலியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிகிறேன். கடந்த 28.10.2023 ஆம் தேதியன்று பஞ்சமாதேவி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் உள்ள ஏடிஎம் மிஷினில் பணம் எடுக்க மாலை 5.30 மணிக்கு சென்றபோது அங்கு ஏடிஎம் மிஷினின் டிஸ்பிளே உடைந்திருந்தது. அது குறித்து நான் அ.சா.1 செழியன், வங்கியின் உதவி மேலாளருக்கு போன் மூலமாக தகவல் சொன்னேன். அ.சா.பொ.1 தான் ஏடிஎம் மிஷினின் உடைந்த பாகங்கள் ஆகும். இது சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.07 20:08:07 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Sessions Case No. 67/2025**

Prosecution Witness : **PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **குணசேகரன்** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 07th day of March 2026.

**(1ம் எதிரி விக்னேஷ், 2ம் எதிரி பிரதீப் ஆகியோர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.) (1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலாயுதம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் புலியூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிகிறேன். கடந்த 28.10.2023 ஆம் தேதியன்று பஞ்சமாதேவி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் உள்ள ஏடிஎம் மிஷினில் அ.சா.2 பணம் எடுக்க மாலை 5.30 மணிக்கு சென்றபோது அங்கு ஏடிஎம் மிஷினின் டிஸ்பிளே உடைந்துவிட்டதாக எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். இது சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.07 20:08:13 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Sessions Case No. 67/2025**

Prosecution Witness : **PW**4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **தவமணி** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluku** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 07th day of March 2026.

**(1ம் எதிரி விக்னேஷ், 2ம் எதிரி பிரதீப் ஆகியோர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.) (1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது பஞ்சமாதேவி, பூந்தோட்ட காளிப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சமாதேவி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் நான் நகை அடமானம் வைக்க சென்றபோது காவல்துறையினர் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். கும்பலாக இருந்தது என்ன செய்தார்கள் என்று தெரியாது. ஏடிஎம் உடைந்ததற்காக விசாரணை செய்தார்கள். அப்போது என்னிடம் ஒரு கையொப்பம் கேட்டார்கள். **பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் முன்பாக எந்த பொருளும் கைப்பற்றவில்லை.

**கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல்துறையினர் என்னை விசாரக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

காவல்துறையினர் உங்கள் முன்பு அ.சா.பொ.1 யை கைப்பற்றினார்கள் என்றும் அதற்காக நீங்கள் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு தற்போது எதற்காக கையொப்பம் செய்தேன் என்று தெரியாது என்றும் ஆஜர் எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN
Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.07 20:08:20 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Sessions Case No. 67/2025**

Prosecution Witness : **PW5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **கணேசன்** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluku** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 07th day of March 2026.

**(1ம் எதிரி விக்னேஷ், 2ம் எதிரி பிரதீப் ஆகியோர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.) (1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது பஞ்சமாதேவியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சமாதேவி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணம் எடுக்க சென்றபோது காவல்துறையினர் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். கும்பலாக இருந்தது என்ன செய்தார்கள் என்று தெரியாது. ஏடிஎம் திருடுபோனதாக சொன்னார்கள். அப்போது என்னிடம் ஒரு கையொப்பம் கேட்டார்கள். **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் முன்பாக எந்த பொருளும் கைப்பற்றவில்லை. **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல்துறையினர் என்னை விசாரக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

காவல்துறையினர் உங்கள் முன்பு அ.சா.பொ.1 யை கைப்பற்றினார்கள் என்றும் அதற்காக நீங்கள் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு தற்போது எதற்காக கையொப்பம் செய்தேன் என்று தெரியாது என்றும் ஆஜர் எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.07 20:08:28 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Sessions Case No. 67/2025**

Prosecution Witness : **PW6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **காத்தமுத்து** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluku** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 07th day of March 2026.

**(1ம் எதிரி விக்னேஷ், 2ம் எதிரி பிரதீப் ஆகியோர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.) (1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரசு காலனியில் குடியிருந்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியாது. நான் அரசு காலனி பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தபோது காவல்துறையினர் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பஞ்சமாதேவியில் நடந்த சம்பவத்திற்காக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். காவல்துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் முன்பு ஆஜர் எதிரி விக்னேஷை அரசு காலனி பேருந்து நிலையத்தில் வைத்து வெங்கமேடு காவல்நிலைய ஆய்வாளர் கைது செய்து ஆஜர் எதிரி விக்னேஷை விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும் அதில் நீங்கள் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒரு உருட்டுக்கட்டை ஒன்றை ஆஜர் எதிரி எடுத்து ஆஜர் செய்தார் என்றும் அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி அதில் உங்களிடம் சாடசியாக கையொப்பம் பெற்றுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கு ஆதரவாக நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.07 20:08:36 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Sessions Case No. 67/2025**

Prosecution Witness : **PW7**

| | | | |
|---|---|---|---|
| **Name** : | சரவணன் | **Father's Name** : | |
| **Village** : | | **Taluku** : | |
| **Caste** : | | **Calling** : | |
| **Religion** : | | **Age** : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 07th day of March 2026.

**(1ம் எதிரி விக்னேஷ், 2ம் எதிரி பிரதீப் ஆகியோர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.) (1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது வெங்கமேட்டில் குடியிருந்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியாது. நான் அரசு காலனி பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தபோது காவல்துறையினர் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல்துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் முன்பு ஆஜர் எதிரி விக்னேஷை அரசு காலனி பேருந்து நிலையத்தில் வைத்து வெங்கமேடு காவல்நிலைய ஆய்வாளர் கைது செய்து ஆஜர் எதிரி விக்னேஷை விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும் அதில் நீங்கள் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒரு உருட்டுக்கட்டை ஒன்றை ஆஜர் எதிரி எடுத்து ஆஜர் செய்தார் என்றும் அதை அய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி அதில் உங்களிடம் சாடசியாக கையொப்பம் பெற்றார் என்றும் சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கு ஆதரவாக நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.07 20:08:43 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.